ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2467/76 - 2025 දෙසැම්බර් මස 19 වැනි සිකුරාදා - 2025.12.19

*2467/76 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ 21/ 1978 (XVI) (D)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2025, திசெம்பர் 11.

**கட்டளைச் சட்டம்**

1. இக்கட்டளைச் சட்டம் 2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, கமத்தொழில் பட்டப்பின்படிப்பு நிறுவக (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

1A - PG 7416 - 53 (2025/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதிய 68/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறானதும், 2009 ஆம் ஆண்டு மே 11 ஆந் திகதிய 1601/13 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான பட்ட வகுப்புக்கு மேற்பட்ட கமத்தொழிற் கல்வி நிறுவகக் கட்டளைச் சட்டம் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அதன் 13 ஆம் பந்தியில், அப்பந்தியின் (அ) முதல் (ஓ) வரையிலான உட்பந்திகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்திகளை இடுவதன் மூலமும் :-

(அ) கமத்தொழில்சார் உயிரியல் ;
(ஆ) கமத்தொழில்சார் பொறியியல் ;
(இ) கமத்தொழில்சார் விசாலிப்பு ;
(ஈ) விலங்குகள்சார் அறிவியல்;
(உ) உயிரியற் புள்ளி விபரங்கள் ;
(ஊ) கமத்தொழில்சார் பொருளியல்;
(எ) பயிர்சார் அறிவியல் ;
(ஏ) உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல்;
(ஐ) தாவரப் பாதுகாப்பு ;
(ஒ) மண்வள அறிவியல் ;
(ஓ) தொழில் நிருவாகம், அத்துடன்
(ஔ) பல்துறைக் கற்கைகள்.".

(2) அதன் 14 ஆம் பந்தியில், அதன் (1) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்திகளை இடுவதன் மூலமும் :-

"14 (1அ) பல்துறைக் கற்கைகளுக்கான கற்கைச் சபைத் தவிர்ந்த ஒவ்வொரு கற்கைச் சபையும் பின்வருமாறு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ;

(ஆ) கமத்தொழிற் கல்வியில் தோதான சிறப்புக் கூறில் உள்ளவர்களும் பல்கலைக்கழகத்தின் கமத்தொழில் பீடத்தினால் சிறப்புக்கூறிலுள்ள அதன் ஆசியர்களுளிருந்து பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களுமான விடயத்துக்கேற்ப, ஒரு சிரேட்ட பேராசிரியர் அல்லது பேராசிரியர் உட்பட ஐந்து உறுப்பினர்கள் மற்றும் வேறு நான்கு ஆசியர்கள் ;

(இ) கமத்தொழிற் கல்வியில் தோதான சிறப்புக் கூறில் திறமைவாய்ந்த ஆட்களுளிருந்து முகாமைச் சபையினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள் ; அத்துடன்

(ஈ) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டனவாகக் கருதப்பட்ட பல்கலைக்கழகங்களின் ஒவ்வொரு கமத்தொழில் பீடத்திலிருந்தனைவரும் அத்தகைய ஒவ்வொரு முறையான பீடத்தினதும் பீடச் சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களும் மூன்று உறுப்பினர்களை விஞ்சாதவர்களும் ஒவ்வொரு சிறப்புக்கூறைச் சேர்ந்தவர்களுமான ஒரு சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர் அல்லது சிரேட்ட விரிவுரையாளர்;

(1ஆ) பல்துறைக் கற்கைகளுக்குமான கற்கைச் சபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ;

(ஆ) 13 ஆம் பந்தியின் உட்பந்திகள் (அ) முதல் (ஔ) வரையில் (இரண்டுமுட்பட) குறிப்பீடு செய்யப்பட்டவர்களும், பல்கலைக்கழகத்தின் கமத்தொழில் பீடத்தின் ஆசியர்களுளிருந்து பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களும் கமத்தொழிற் கல்வியிலான சிறப்புக்கூறில் நிபுணத்துவம் கொண்டவர்களுமான பதினொரு உறுப்பினர்கள் ;

(இ) முகாமைச் சபையினால் நியமிக்கப்பட்டவர்களும் இயற்கை அறிவியல், தொழினுட்பவியல், முகாமைத்துவம் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் உட்பட இயைபான பல்துறைக் கற்கைத் துறைகளில் மேன்மை எய்திய தனியாட்களுளிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுமான மூன்று உறுப்பினர்கள்.".

(3) அதன் 25 ஆம் பந்தியில், "கமத்தொழிற் கல்விச் சிறப்புக்கூறு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

"கமத்தொழிற் கல்விச் சிறப்புக்கூறு" என்பது, கமத்தொழில்சார் உயிரியல், கமத்தொழில்சார் பொறியியல், கமத்தொழில்சார் விசாலிப்பு, விலங்குகள்சார் அறிவியல், உயிரியற் புள்ளி விபரங்கள், கமத்தொழில்சார் பொருளியல், பயிர்சார் அறிவியல், உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல், தாவரப் பாதுகாப்பு, மண்வள அறிவியல், தொழில் நிருவாகம், பல்துறைக் கற்கைகள் அல்லது நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் மேல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய வேறேதேனும் சிறப்புக்கூறு என்று பொருளாகும் ; அத்துடன்.".

EOG 12 - 0188